# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## IDOP No. 44 /2020 RW3

30.10.2025 **எ.ம.சா.3 கோகுல் அபர்ணா ஹர்ஷினி மேரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் தற்போது எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்று கேட்டால் திருவண்ணாமலை மாவட்ட வேட்டவலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் என் தாயாருடன் வசித்து வருகிறேன். நான் நர்சிங் கோர்ஸ் படித்து முடித்துள்ளேன். நான் 1 முதல் 12ம் வகுப்பு வரை வேட்டவலம் அலோஷியஸ் மேல்நிலைப்பள்ளியில் படித்து வந்தேன். எனது தங்கையின் பெயர் சந்திய ஜெயபிரகதி அவர் நான் படித்த வேட்டலம் பள்ளியில் தான் படித்தார். எனது தம்பியின் பெயர் யூஜித் ரேனால்டு வேட்டவலம் செயின்ட் மேரி மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு தற்போது படித்து வருகிறார். எனது அப்பாவின் சொந்த ஊர் விழுப்புரம் மாவட்டம் நங்காத்தூர் கிராமம். நங்காத்தூரில் ஒரு பள்ளியில் நான் 7ம் வகுப்பு மட்டும் படித்தேன், எனது தங்கை 5ம் வகுப்பும் படித்தார், எனது தம்பி 3ம் வகுப்பும் படித்ததாக நினைக்கிறேன். சுமார் 2015ம் ஆண்டு நான் நங்காத்தூரில் படித்தேன் என நினைக்கின்றேன். நாங்கள் சகோதர சகோதரி மூவரும் நங்காத்தூரில் தலா ஒரு ஆண்டு படித்தோம் என்றால் சரிதான். எனது அப்பா இந்திய ராணுவத்தில் பணிபுரிந்தவர் என்றால் சரிதான். அவர் விடுமுறையின் போது மட்டுமே ஊருக்கு வருவார். நாங்கள் மூவருமே எனது அம்மாவின் பராமரிப்பில் தான் இப்போழுது வரை வாழந்து வருகிறோம். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் எனது தாயாரை எனது தாய் வழி தாத்தா, பாட்டி எந்த கல்வி நிறுவனத்தில், எந்த வருடம் செவிலியர் மற்றும் பி.எட் படிக்க வைத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு தெரியும். எனது அம்மா அவரது திருமணத்திற்கு முன்போ அவரது செவிலியர் படிப்பை முடித்து விட்டார். எனது அம்மா திருமணத்திற்கு பிறகு தான் பி.எட். படித்தார். எனது அம்மா பி.எட் படிக்கும் போது எனது எத்தனை வயது இருக்கும் என்று கேட்டால் நான் சுமார் 3- 4ம் வகுப்பு படித்து வந்தததாக நியாபகம் உள்ளது. எனது அம்மா எந்த ஒரு கோட்டாவின் அடிப்படையிலும் அரசு பணியில் சேரவில்லை. எனது அம்மாவுக்கு ஒரு மூத்த சகோதரியும், 2 அண்ணன்களும், ஒரு தம்பியும் உள்ளார்கள். 1 அண்ணன் இறந்து விட்டார். எனது 2 தாய் மாமன் வீடுகளும் வேட்டவலத்தில் தான் உள்ளது. இருவரும் ஒரே வீட்டில் தனித்தனி போர்ஷனில் வசிக்கிறார்கள் ஆனால் கூட்டுக் குடும்பமாக வாழ்கிறார்கள். அந்த வீட்டிற்கு நான் போவது உண்டு. எனது தாய் மாமன்களுக்கு வேறு வீடு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்ன கூட்டுக்குடும்பமாக வாழும் வீடானது எனது தாய் வழி தாத்தா கட்டிக் கொடுத்தது ஆகும். நான் எனது அம்மாவுடன் வசிக்கும் வீடு பெரிய வீடா, எனது தாய் மாமன்கள் வசிக்கும் வீடு பெரிய வீடா என்றால் எனது தாய் மாமன்கள் வசிக்கும் வீடு தான் பெரிய வீடு. எனது தாய் வழி தாத்தாவும் ராணுவத்தில் பணிபுரிந்தவர். கடந்த 2004ம் ஆண்டு எனது தாய் வழி தாத்தா பணி ஓய்வு பெற்றார். நான் தற்போது என் அம்மாவுடன் வசிக்கும் வீடானது கட்டப்படும் போது நான் சுமார் 1 முதல் 5ம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தேன். நாங்கள் வசிக்கும் வீடு மட்டும் தான் என் அம்மா பெயரில் உள்ளதா என்றால் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. எனது பாட்டி வீடு அருகே ஒரு ஓட்டு வீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஓட்டு வீட்டில் தங்கிக் கொண்டே நான் வசித்து வரும் வீட்டை கட்டினார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டை கட்டும் போது எனது அப்பா எங்களுடன் இருந்தாரா இல்லையா என்றால் எனக்கு தற்போது நியாபகம் இல்லை. அந்த ஓட்டு வீடு யாருடைய வீடு என சொல்வார்கள் என்று கேட்டால் எனக்கு தெரியவில்லை. தற்போது அந்த ஓட்டு வீட்டில் யார் வசிக்கிறார்கள் என்றால் யாரும் வசிக்கவில்லை. நாங்கள் தற்போது வசிக்கும் வீட்டை கட்டுவதற்கு யார் பணம் கொடுத்தார்கள் என்று கேட்டால் எனது தாத்தா, பாட்டி, தாய் மாமன்கள் தான் கொடுத்தார்கள். மேற்படி

அவர்கள் பணம் கொடுத்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. எனது தாத்தா எவ்வளவு பென்ஷன் வாங்குகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் கண்டுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். மேலும் 5ம் பத்தியில் எனது தகப்பனார் 2018ம் ஆண்டு குடிபோதையில் வீட்டில் தனிமையாக இருந்த என்னிடம் தவறாக நடக்க முற்பட்டார் என்று நான் சொல்லியிருப்பதில் எந்த தேதி, எந்த வீடு, கிழமை, நேரம் ஆகியவற்றை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வேட்டவலம் காவல் நிலையத்தில் எனது அம்மா கொடுத்த புகாரின் குற்ற எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவின் சம்பளத்தில் இருந்து எனது அம்மாவிற்கு எவ்வளவு பணம் பிடித்தம் செய்து கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எந்த ஒரு பணமும் கொடுக்கவேயில்லை. எனது அப்பா பணிபுரிந்த காலத்தில் அவரது சம்பளத்தில் இருந்து 33 சதவீதத்தை பிள்ளைகளாகிய எங்களுடைய படிப்பிற்காகவும், பராமரிப்பிற்காகவும் எனது அப்பா பணிபுரியும் ராணுவ துறையில் இருந்தே அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா எந்த தேதியில் எந்த இடத்தில், எந்த நேரத்தில் வைத்து அடித்து கொடுமை படுத்தினார் என்று நான் குறிப்பிட்டு எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது அப்பா பிள்ளைகளாகிய எங்களையும், எனது அம்மாவையும் சிக்கீம் ராணுவ முகாம் குடியிருப்பில் வசித்து வந்த போது எந்த தேதி, எந்த நேரம் அடித்து கொடுமை படுத்தினார் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நானும், எனது தம்பி, தங்கைகள் மூவரும் எனது அப்பாவுடன் வாழ்ந்த காலங்களை விட எனது அம்மாவுடன் வாழ்ந்த காலங்கள் தான் அதிகம் என்றால் சரிதான். நாங்கள் மூவரும் எங்கள் அம்மாவின் சொல்லுக்கு கீழ்படிந்து தான் நடப்போம் என்றால் சரிதான். எனது அப்பாவை எங்களுக்கு பிடிக்காத மாதிரி எனது அம்மா எங்களுக்கு சொல்லி சொல்லி வளர்த்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா நங்காத்தூருக்கு எங்களை ஒன்றாக வாழ அழைத்தார் என்றும், அங்கு போகக்கூடாது என்பதற்காக எனது அப்பாவின் மீது குற்றம் சாட்சி எங்கள் அம்மா எங்களை வளர்த்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் வசிக்கும் வீட்டை கட்டிக்கொடுக்கின்ற அளவிற்கு தாத்தா பாட்டிக்கோ, தாய் மாமன்களுக்கோ பொருளாதார வசதியில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா தான் இரண்டு வங்கிகளில் லோன் போட்டு நாங்கள் வசிக்கும் வீட்டை கட்டிக் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தாவும், எனது 2 தாய் மாமன்களும் ராணுவத்தில் தான் பணிபுரிந்து வந்தார்கள். எனது தாய் மாமன்கள் அவர்களுக்கு என்று தனித்தனியாக வீடு கட்டிக் கொள்ளவில்லை. எனது தாய் வழி பெரியம்மா அரசு பள்ளி ஆசிரியர் ஆவார். எனது தாய் வழி பெரியம்மாவின் கணவரும் ராணுவத்தில் பணிபுரிந்தார். அவர்கள் வசிக்கும் வீட்டையும் எனது தாய் வழி தாத்தா மற்றும் தாய் மாமன்கள் தான் கட்டிக் கொடுத்தார்கள். எனது தாத்தா, தாய் மாமன்கள் ஒன்றாக வசிக்கும் வீடு மிகப் பெரியது என்றும், ஆகவே அவர்கள் தனித்தனியாக வீடு கட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எனது பெரிய தாய்மாமன் நான் 5ம் வகுப்பு படிக்கும் போது இறந்தார். இறந்த எனது தாய் மாமனின் மனைவியும், மகளும் தனியாக வசித்து வருகிறார்கள். அவர்கள் எந்த ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் தாய் மாமனின் மகளுக்கு திருமணமாகி அவரது கணவர் வீட்டில் வசிக்கிறார். என் தாய் மாமனின் மகனும், தாய் மாமனின் மனைவியும் வேலூரில் வசிக்கிறார்கள். எனது இறந்து தாய்மாமனுக்கு வேட்டவலத்திலும் தனியாக வீடு உள்ளதா என்றால் இல்லை. 2018ம் ஆண்டு எனது அப்பா பணியில் இருந்து விடுமுறைக்கு ஊருக்கு வந்த போது நான் சரிவர படிக்காமல் தொலைப்பேசியில் பேசிக் கொண்டு இருந்த காரணத்தால் என்னை கண்டித்தார் என்றும், அதனால் அவர் மீது உள்ள கோபத்தினாலும், எனது அம்மாவின் தவறான அறிவுறுத்துததாலும், எனது அப்பாவின் மீது அபாண்டமாக குற்றம் சாட்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் எனது அம்மா சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சொல்லியுள்ள விவரங்கள் என்றும், நானும் வேட்டவலத்திலேயே தங்கி படித்து வந்ததாலும், என் அம்மாவுடனே வசிக்க வேண்டும் என்றும், நங்காத்தூர் போகக்கூடாது என்ற

நோக்கத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. IDOP 02/2017ல் 05.01.2018ந் தேதியிட்ட தீர்ப்பில் 9ம் பக்கத்தில் எனது தாயார் அவரது சாட்சியத்தில் தனது கணவர் விவாகரத்து கோரியுள்ளதாகவும், தனக்கு விவாகரத்து கொடுக்க சம்மதம் இல்லை என்றும், தனது பெரிய மகள் (அதாவது நான்) 10ம் வகுப்பு முடிக்கும் வரை அங்கேயே (வேட்டவலம்) படிக்கவும், தேர்வு முடிந்ததும், ஏப்ரம் மாதம் நங்காத்தூர் செல்ல சம்மதம் என்றும் சொன்னதன் பேரில் எனது அப்பாவும் ஏற்றுக்கொண்டதன் பேரில் அந்த வழக்கானது சமரத்தின் அடிப்படையில் தள்ளுபடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நங்காத்தூர் போக எனக்கு விருப்பம் இல்லாதததாலும், எனது அம்மாவுடன் வேட்டலத்திலேயே தங்கி வாழ நான் விரும்புவதாலும், எனது அப்பாவின் மீது பொய் குற்றச்சாட்டை கூறி அவர் வேட்டவலத்திற்கு வராமல் தடுக்கும் நோக்கில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவோ, நாங்களோ எந்த ஒரு காலத்திலும் எனது அப்பாவுடன் மகிழ்ச்சியாக வாழ சட்டப்பூர்வமான நடவடிக்கையே எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா எங்களுடன் சந்தோஷமாக வாழாமல் கொடுமை செய்து வந்தார். நான் தற்போது வசிக்கும் வீடு மற்றும் வேட்டவலத்தில் எனது அம்மா பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவின் உழைப்பால் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது அம்மாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு எல்லா சொத்துக்களும் எனது அம்மா வாங்கியது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா எங்களுடன் சேர்ந்து வாழ வேட்டவலம் வந்தால் அவரது உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.